
SINCE 2013
We Shine Academy®
guiding you to get through
TNPSC | TNUSRB | TET | SSC | BANK EXAM

# DAILY CURRENT AFFAIRS APRIL 21

| CONTENT | EXAM REMAINER | KINDLY JOINS |
| --- | --- | --- |
| 1. National News<br>2. TN State News<br>3. PYQ CA Questions<br>4. PRACTICAL MCQ'S<br>5. REVISION | Group I- 06.09.2026<br>மீதம் 137 நாட்கள்<br><br>Group II & IIA- 25.10.2026<br>மீதம் 186 நாட்கள்<br><br>Group IV- 20.12.2026<br>மீதம் 243 நாட்கள் | https://t.me/weshinetnpscexams<br><br>https://chat.whatsapp.com/LBUXIXSof5046E3GWmFuTs?mode=gi_t |

Visit youtube link: https://youtube.com/live/ub5qr-ejiHQ



## 1. TODAY NEWS ARTICLES

# பொருளாதார கூட்டுறவு ஒப்பந்தம் மேம்பாடு: இந்தியா–தென்கொரியா முடிவு

**புது தில்லி, ஏப். 20:** இரு நாடுகளிடையேயான பொருளாதார கூட்டுறவு ஒப்பந்தத்தை மேம்படுத்துவதற்கான பேச்சுவார்த்தையைத் தொடங்க இந்தியாவும், தென்கொரியாவும் திங்கள்கிழமை ஒப்புக்கொண்டன.

புவிசார் அரசியல் பதற்றம் காரணமாக வர்த்தகத்தில் இடையூறுகள் அதிகரித்துவரும் சூழலில், பிரதமர் நரேந்திர மோடி – தென்கொரிய அதிபர் லீ ஜா மியூங் இடையேயான பேச்சுவார்த்தைக்குப் பிறகு இரு நாடுகள் தரப்பில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தென்கொரிய அதிபருடனான ஆலோசனைக்குப் பிறகு பிரதமர் வெளியிட்ட பதிவில், 'இந்த ஆலோசனையைத் தொடர்ந்து, இரு நாடுகளிடையேயான நம்பகமான கூட்டுறவை எதிர்காலம் சார்ந்த கூட்டுறவாக மேம்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2010-ஆம் ஆண்டில் இரு நாடுகளிடையே விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் (சிஇபிஏ) மேற்கொள்ளப்பட்ட பிறகு, இருதரப்பு வர்த்தகம் மற்றும் பொருளாதாரம் வேகம் பெற்றன.

கணினி சிப்கள் முதல், கப்பல்கள் வரை மற்றும் அறிவுசார் நிபுணர்கள் முதல் தொழில்நுட்பம் வரை, சுற்றுச்சூழல் முதல் எரிசக்தி வரை என ஒவ்வொரு துறையிலும் ஒத்துழைப்புக்கான புதிய வாய்ப்புகள் இருதரப்புக்கும் உருவாகின. ஒருங்கிணைந்த இந்திய-பிசிபிக் பிராந்திய அமைதி மற்றும் மேம்பாட்டிலும் இரு நாடுகளும் தொடர்ந்து பங்களிப்பாற்றும்.

இருதரப்பு வர்த்தகம், முதலீடுகள், செயற்கை நுண்ணறிவு, செமிகண்டக்டர், முக்கிய மற்றும் வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள் மற்றும் மக்களுக்கு இடையேயான உறவுகள் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு உறவை மேலும் விரிவுபடுத்துவது குறித்தும் இந்தப் பேச்சுவார்த்தையில் ஆலோசிக்கப்பட்டது' என்று குறிப்பிட்டார்.

இருதரப்பு பேச்சுவார்த்தை குறித்து மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சக் பியூஷ் கோயல் கூறியதாவது:

இந்தியா- கொரியா இடையேயான விரிவான பொருளாதார கூட்டுறவு ஒப்பந்தத்தை மேம்படுத்தும் பணியை மீண்டும் தொடங்கவும், அதைப் புதுப்பிக்கவும் உரிய வழிகள் குறித்து இருதரப்பில் ஆலோசிக்கப்பட்டது.



இந்தியா வந்துள்ள தென்கொரிய அதிபர் லீ ஜா மியூங், பிரதமர் மோடி முன்னிலையில் இருதரப்பில் கையொப்பமான ஒப்பந்தத்தை பறிமாறிக்கொண்ட இரு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள்.

தொழிலக ஒத்துழைப்பு, பசுமை எரிசக்தி, எண்ம வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை ஆழப்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. இரு நாடுகளிடையேயான விரிவான பொருளாதார கூட்டுறவு ஒப்பந்தத்தை மேம்படுத்துவது தொடர்பாக இதுவரை 10 சுற்று பேச்சுவார்த்தை நிறைவடைந்துள்ளது.

**தடையற்ற வர்த்தக ஒப்பந்தம்:** கொரிய அதிபருடன் இந்தியா வந்துள்ள அந் நாட்டு வர்த்தக அமைச்சர் யோ ஹன்-கூ உடனான பேச்சுவார்த்தையின் போது, இரு நாடுகளிடையேயான வர்த்தக உறவை சமகாலத்துக்கு ஏற்றதாகவும், வர்த்தகப் பற்றாக்குறை குறித்த கவலைகளைக் களையவும் புதிதாக இருதரப்பு தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்து பரிசீலிக்குமாறு கொரியாவிடம் வலியுறுத்தப்பட்டது.

இரு நாடுகளிடையே மிகவும் சமச்சீரான வர்த்தக உறவை உறுதி செய்வதோடு, தற்போதைய ரூ. 2.5 லட்சம் கோடி (27 பில்லியன் டாலர்) மதிப்பிலான இருதரப்பு வர்த்தகத்தை வரும் 2030-இல் ரூ. 5 லட்சம் கோடி (54 பில்லியன் டாலர்) மதிப்பிலான வர்த்தகமாக உயர்த்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

**இந்தியாவில் கொரியப் பகுதி...** நவீன தொழில்நுட்பம் உள்ளிட்ட மேலும் சில துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

குறிப்பாக ஜப்பானிய நகரமைப்பு பாணியில் இந்தியாவில் கொரியப் பகுதியை அமைப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. இந்தப் பகுதியில் பள்ளிகள், கல்லூரிகள், ஹோட்டல்கள், உணவகங்கள் மட்டுமின்றி, தொழிற்சாலைகளுக்கும் உடனடியாகப் பயன்படுத்தக்கூடிய உள்கட்டமைப்பு வசதிகள் இடம்பெறும். இது மூலதன முதலீட்டை அதிக அளவில் ஈர்க்கும் என நம்பப்படுகிறது.

இரு நாடுகளின் தனியார் துறைகளிடையேயும் இந்தப் பேச்சுவார்த்தையின்போது பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமாகின என்றார்.

# இந்தியாவில் 5 ஆண்டுகளுக்கு நிலைநிறுத்தப்படும் 5 ரஷிய போர்க் கப்பல்கள், 10 போர் விமானங்கள்

**புது தில்லி, ஏப். 20:** இந்தியாவில் 3,000 ரஷிய ராணுவ வீரர்கள், 5 ரஷிய போர்க் கப்பல்கள், 10 போர் விமானங்கள் 5 ஆண்டு காலம் நிலைநிறுத்தப்படுவது தொடர்பான ஒப்பந்தம் அமலுக்கு வந்துள்ளது.

இந்தியா- ரஷியா இடையே பரஸ்பர தளவாட பரிமாற்ற ஒப்பந்தம் (ரெலோஸ்) ரஷிய தலைநகர் மாஸ்கோவில் கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் கையொப்பமானது. இந்த ஒப்பந்தம் தற்போது அமலுக்கு வந்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி, இந்தியாவில் 5 ஆண்டு காலம்வரை 3,000 ரஷிய ராணுவ வீரர்கள் தங்கியிருப்பர். 5 ரஷிய போர்க் கப்பல்கள், 10 ரஷிய போர் விமானங்கள் நிலைநிறுத்தப்படும். இது அமைதி காலம், யுத்த காலத்துக்கும் பொருந்தும்.

## புதிய ஒப்பந்தம் அமலுக்கு வந்தது

இதேபோல், ரஷியாவிலும் இந்திய ராணுவ வீரர்கள் 3,000 பேர் தங்கியிருப்பர். 5 இந்திய போர்க் கப்பல்களும், 10 இந்திய போர் விமானங்களும் 5 ஆண்டு காலம் நிலைநிறுத்தப்படும். 2 நாடுகளும் தத்தமது ராணுவத் தளங்கள், கடற்படைத் தளங்கள், விமான தளங்களை பிற நாடுகள் பயன்படுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவும், ரஷியாவும் விரும்பினால், இந்த 5 ஆண்டு காலத்தை மேலும் 5 ஆண்டு காலம் நீட்டித்துக்கொள்ளவும் ஒப்பந்தத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கம், இந்தியா-ரஷியா இடையே ராணுவ ரீதியான ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்துவதும், தளவாட பரிமாற்றத்தை அதிகரிப்பதுமே ஆகும். இந்த ஒப்பந்தம், உலகளாவிய அளவில் தற்போது அதிக கவனம் ஈர்த்துவரும் பிரதேசமான ஆர்டிக் பிரதேசத்தில் இந்தியா தனது செல்வாக்கை விரிவுபடுத்த உதவும். அதேபோல் ரஷியாவுக்கு அதன் போர் விமானங்களுக்கு எரிபொருள் நிரப்புதல், உதிரிபாகங்கள் பெறுதல், பழுதை சரிசெய்தல் போன்ற பணிகளுக்கு உதவும். மேலும், இந்திய பெருங்கடல் பிரதேசத்தில் வரும் அதன் போர்க் கப்பல்கள், வர்த்தக கப்பல்களுக்குத் தேவையான உதவிகளைப் பெறவும் உதவும்.

ஏற்கெனவே இதேபோன்ற ஒப்பந்தத்தை (லெமோவா) அமெரிக்காவுடனும் இந்தியா செய்துள்ளது. ஆனால், அந்த ஒப்பந்தத்தில் இந்தியாவில் அமெரிக்க வீரர்கள், போர் விமானங்கள், போர்க் கப்பல்கள் நிறுத்தப்பட வழிவகை செய்யப்படவில்லை. அதேபோல் அமெரிக்காவிலும் இந்திய வீரர்கள், போர் விமானங்கள், போர்க் கப்பல்கள் நிறுத்தப்பட வழிவகை செய்யப்படவில்லை.

இந்தியாவின் நீண்டகால நெருங்கிய நட்பு நாடாகவும், சர்வதேச அளவில் நம்பகமான கூட்டாளி நாடாகவும் ரஷியா திகழ்வதால் அந்நாட்டுக்கு மட்டும் வீரர்கள், போர் விமானங்கள், போர்க் கப்பல்களை நிறுத்த அனுமதி தரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# முன்னணி உள்கட்டமைப்புத் துறை உற்பத்தி சரிவு

## கச்சா எண்ணெய் உற்பத்தி வீழ்ச்சியால் பின்னடைவு

**புது தில்லி, ஏப். 20:** நாட்டின் 8 உள்கட்டமைப்புத் துறைகளின் உற்பத்தி கடந்த மார்ச் மாதத்தில் 0.4 சதவீத சரிவைக் கண்டுள்ளது. இது கடந்த 19 மாதங்களில் காணப்படாத வீழ்ச்சியாகும்.

மத்திய அரசு திங்கள்கிழமை வெளியிட்ட தரவுகளின்படி, நாட்டின் தொழில் துறை வளர்ச்சிக்கு முக்கியத் தூண்களாக விளங்கும் நிலக்கரி, கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு, சுத்திகரிப்புத் தயாரிப்புகள், உரங்கள், எஃகு, சிமெண்ட், மின்சாரம் ஆகிய 8 துறைகளின் ஒட்டுமொத்த உற்பத்தி வளர்ச்சி கடந்த பிப்ரவரியில் 2.3 சதவீதமாக இருந்த நிலையில், மார்ச் மாதத்தில் எதிர்மறை நிலைக்குச் சென்றிருப்பது பொருளாதார வட்டாரத்தில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் திடீர் சரிவுக்கு முக்கியக் காரணமாக கச்சா எண்ணெய் உற்பத்தி வீழ்ச்சி பார்க்கப்படுகிறது. முந்தைய 2025 மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில், நடப்பாண்டு கச்சா எண்ணெய் உற்பத்தி 5.7 சதவீதம் சரிந்துள்ளது.

உர உற்பத்தி பிப்ரவரியின் 3.4 சதவீத வளர்ச்சியிலிருந்து மார்ச்சில் அதிரடியாக 24.6 சதவீதம் சரிந்துள்ளது. இதேபோல், நிலக்கரி துறையும் பின்னடைவைச் சந்தித்துள்ளது. பிப்ரவரியில் 2.3 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்த நிலக்கரி உற்பத்தி, மார்ச்சில் 4 சதவீத வீழ்ச்சியைக் கண்டுள்ளது.



சிமெண்ட் உற்பத்தி 4 சதவீதம் அதிகரித்திருந்தாலும், முந்தைய மாதத்தின் 9.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இது தொய்வைக் காட்டுகிறது. எஃகு உற்பத்தி 2.2 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

நாட்டின் ஒட்டுமொத்த தொழில்துறை உற்பத்தி குறியீட்டில் (ஐஐபி) சுமார் 40 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ள இந்த 8 முக்கிய துறைகளில், முக்கியத்துவம் வாய்ந்த பெட்ரோலிய சுத்திகரிப்புத் துறை 0.1 சதவீத வளர்ச்சியைப் பெற்றுள்ளது. பிப்ரவரி மாதத்தில் இத்துறை ஒரு சதவீத சரிவைச் சந்தித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

உள்கட்டமைப்புத்துறைகள் தடுமாறினாலும், உற்பத்தித் துறையின் எழுச்சியால் பிப்ரவரி மாதத்துக்கான ஒட்டுமொத்தத் தொழில் துறை உற்பத்தி வளர்ச்சி (ஐஐபி) 5.2 சதவீதமாக உயர்ந்தது.

உற்பத்தித் துறை 6 சதவீத வளர்ச்சியை எட்டியதன் மூலம் மின்சார உற்பத்தியில் ஏற்பட்ட சரிவை ஓரளவு ஈடுசெய்ய முடிந்தது. ஆனால் தற்போது மார்ச் மாதத்தில், உள்கட்டமைப்புத் துறைகளின் சரிவால் தொழில் துறை உற்பத்தி வளர்ச்சி (ஐஐபி) 1 முதல் 2 சதவீதமாக சரியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2025–26 நிதியாண்டில் 8 முன்னணி உள்கட்டமைப்புத் துறைகளின் உற்பத்தி வளர்ச்சி விகிதம் 2.6 சதவீதமாக பதிவாகியுள்ளது. கடந்த நிதியாண்டின் 4.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இது மிதமான வளர்ச்சியாகக் கருதப்படுகிறது.




**சமையல் எரிவாயு தட்டுப்பாட்டை போக்க**

## எல்பிஜி-ல் 20% டிஎம்இ காஸ் கலக்க திட்டம்

**புதுடெல்லி**

சமையல் காஸ் தட்டுப்பாட்டை போக்க எல்பிஜி காஸில் 20 சதவீதம் டிஎம்இ காஸை கலக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

இந்தியாவின் கச்சா எண்ணெய் தேவையில் 85 சதவீதம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இதேபோல நாட்டின் எல்பிஜி சமையல் காஸ் 60 சதவீதம் இறக்குமதி செய்யப்படுகிறது. அமெரிக்கா, ஈரான் இடையிலான போர் காரணமாக உலகம் முழுவதும் கச்சா எண்ணெய், சமையல் காஸ்-க்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

சமையல் காஸ் தட்டுப்பாட்டுக்கு தீர்வு காண உள்நாட்டில் எல்பிஜி உற்பத்தி அதிகரிக்கப்பட்டு உள்ளது. மேலும் அமெரிக்கா, அங்கோலா உள்ளிட்ட நாடுகளில் இருந்து எல்பிஜி காஸ் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது.

ஏற்கெனவே நாடு முழுவதும் பெட்ரோலில் 20 சதவீதம் அளவுக்கு எத்தனால் கலப்பது கட்டாயமாக்கப்பட்டு உள்ளது. இதன்மூலம் கச்சா எண்ணெய் இறக்குமதி கணிசமாக குறைந்து, பெட்ரோல் தட்டுப்பாடு பிரச்சினைக்கும் எளிய முறையில் தீர்வு காணப்பட்டு உள்ளது.

இதே போல எல்பிஜி சமையல் காஸில் 20 சதவீதம் டிஎம்இ காஸை கலக்க மத்திய அரசு திட்டமிட்டு உள்ளது. இதன்மூலம் எல்பிஜி இறக்குமதியை கணிசமாக குறைக்க முடியும் என்று பெட்ரோலியத் துறை தெரிவித்துள்ளது.

டைமெத்தைல் ஈதர் (டிஎம்இ) என்பது ஒரு செயற்கை எரிவாயு. இயற்கை எரிவாயு, நிலக்கரி வாயுவாக்கம் ஆகியவற்றின் மூலம் டிஎம்இ காஸ் உற்பத்தி செய்யப்படுகிறது. இது தூய்மையான எரிவாயு ஆகும். எல்பிஜி உடன் ஒப்பிடும்போது டிஎம்இ காஸ் எரியும்போது புகை, நைட்ரஜன் ஆக்ஸைடு, கந்தக ஆக்ஸைடு ஆகியவை மிகக் குறைவாக வெளியேறும்.

மும்பையை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் நியூ ஏரா கிளீன்டெக் சொல்யூஷன் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் நிலக்கரி வாயுவாக்கம் மூலம் டிஎம்இ காஸை உற்பத்தி செய்து வருகிறது. இதேபோல மகாராஷ்டிராவின் புனேவை சேர்ந்த மத்திய அரசின் சிஎஸ்ஐஆர்- என்சிஎல் நிறுவனம், மெத்தனாலில் இருந்து டிஎம்இ காஸை உற்பத்தி செய்யும் தொழில்நுட்பத்தை கண்டுபிடித்து உள்ளது.

### தொழில்நுட்பத்தை கண்டுபிடித்த தமிழர் தலைமையிலான குழு

மகாராஷ்டிராவின் புனே நகரில் மத்திய அரசின் சிஎஸ்ஐஆர் - என்சிஎல் நிறுவனம் செயல்படுகிறது. அங்கு முதன்மை விஞ்ஞானியாக உள்ள தமிழகத்தின் பவானி பகுதியை சேர்ந்த ராஜா திருமலைச்சாமி தலைமையிலான குழு மெத்தனாலில் இருந்து டிஎம்இ காஸை தயாரிக்கும் தொழில்நுட்பத்தை கண்டறிந்து உள்ளது.

இதுகுறித்து ராஜா திருமலைச் சாமி கூறும்போது, "மெத்தனாலில் இருந்து டிஎம்இ காஸை தயாரிப்பது தொடர்பாக 5 காப்புரிமைகளை பெற்றிருக்கிறோம். பின்லாந்து, கானா உள்ளிட்ட 4 நாடுகள் எங்களிடம் தொழில்நுட்ப உதவியை கோரி உள்ளன" என்று தெரிவித்தார்.

| | | | GT | | | | BC | | | | BCM | MBC/DC | | | | | SC | | | SC(A) | | | ST | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | POST | POST CODE | G | PSTM (G) | W | PSTM (W) | G | PSTM (G) | W | PSTM (W) | W | G | PSTM (G) | W | HH\HI | LV | G | PSTM (G) | W | G | PSTM (G) | W | G | TOTAL |
| 1 | Deputy Collector | 1001 | 3 | 1 | 1 | 1 | 4 | 1 | 2 | | 1 | 1 | 1 | 2 | | 1 | 3 | | 1 | | | 1 | 4 | 28 |
| 2 | Deputy Superintendent of Police (Category-I) | 1002 | 1 | | 1 | | 1 | | 1 | | | 1 | | 1 | | | 1 | | | | | | | 7 |
| 3 | Assistant Commissioner (Commercial Taxes) | 1003 | 3 | 1 | 2 | | 3 | 1 | 1 | 1 | | 1 | 1 | 1 | 1 | | 1 | 1 | | 1 | | | | 19 |
| 4 | Assistant Director of Rural Development | 1006 | 1 | | 1 | | 2 | | | | | 1 | | | | | 7 | | 1 | | | | 2 | 15 |
| 5 | District Employment Officer | 1007 | | | | | 1 | | | | | 1 | | | | | | | | | | | 1 | 3 |
| 6 | Assistant Commissioner of Labour | 1946 | 1 | | | | 1 | | | | | 1 | | | | | 1 | | | | 1 | | 1 | 6 |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | Total | | 9 | 2 | 5 | 1 | 12 | 2 | 4 | 1 | 1 | 6 | 2 | 4 | 1 | 1 | 13 | 1 | 2 | 1 | 1 | 1 | 8 | 78 |

Table title: **2025 GRP I Services - Distribution of Vacancie as on 25th August 2025 - Updated Till Addendum 4D** (GRP I Services)


Bollywood actress Sayani Gupta was honoured with the Harvard South Asian “Person of the Year” Award 2026.

பாலிவுட் நடிகை சயானி குப்தாவுக்கு ஹார்வர்ட் தெற்காசிய “ஆண்டின் சிறந்த நபர்” விருது 2026 வழங்கி கௌரவிக்கப்பட்டது.




All India Council for Technical Education (AICTE) launched VAANI 3.0 (Vibrant Advocacy for Advancement and Nurturing of Indian Languages) to promote technical education, research, and learning in Indian languages.

அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சில் (AICTE), இந்திய மொழிகளில் தொழில்நுட்பக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் கற்றலை ஊக்குவிப்பதற்காக வாணி 3.0 (இந்திய மொழிகளின் முன்னேற்றம் மற்றும் வளர்ப்பிற்கான உயிரோட்டமான பரிந்துரை) திட்டத்தைத் தொடங்கியது.




❖ The Supreme Court of India ruled that people who give dowry as victims cannot be prosecuted under the law. ❖ The judgment interprets the Dowry Prohibition Act 1961, which bans both giving and taking dowry but provides protection to victims.

❖ வரதட்சணை கொடுப்பவர்கள் பாதிக்கப்பட்டவர்களாகக் கருதப்பட்டு, அவர்கள் மீது சட்டப்படி வழக்குத் தொடர முடியாது என்று இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

❖ இந்தத் தீர்ப்பு, வரதட்சணை கொடுப்பதையும் வாங்குவதையும் தடைசெய்து, பாதிக்கப்பட்டவர்களுக்குப் பாதுகாப்பை வழங்கும் 1961 ஆம் ஆண்டு வரதட்சணைத் தடைச் சட்டத்திற்கு விளக்கம் அளிக்கிறது.




The World Anti-Doping Agency (WADA) Global Anti-Doping Intelligence and Investigations Network (GAIIN) conference was held in New Delhi.

**உலக ஊக்கமருந்து தடுப்பு முகமையின் (WADA) உலகளாவிய ஊக்கமருந்து தடுப்பு புலனாய்வு மற்றும் விசாரணை வலையமைப்பின் (GAIIN) மாநாடு புது தில்லியில் நடைபெற்றது.**




Developing countries launched the first-ever **Borrowers' Platform** at the IMF,World Bank Spring Meetings 2026.

❖ The platform aims to improve coordination and give a collective voice to borrowing countries on debt issues.

❖ It will be supported by the United Nations Conference on Trade and Development (UNCTAD) as its secretariat. ❖ It provides a forum for finance ministers and central bank governors to share knowledge and solutions.

வளரும் நாடுகள், IMF/உலக வங்கி வசந்தகாலக் கூட்டங்கள் 2026-ல், முதல் கடன் பெறுவோர் தளத்தைத் தொடங்கின.

❖ இந்தத் தளம், கடன் பிரச்சினைகள் குறித்து கடன் வாங்கும் நாடுகளிடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதையும், ஒருமித்த குரலைக் கொடுப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ ஐக்கிய நாடுகள் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு மாநாடு (UNCTAD) இதன் செயலகமாக இதற்கு ஆதரவளிக்கும்.

❖ இது நிதி அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் அறிவையும் தீர்வுகளையும் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு மன்றத்தை வழங்குகிறது.



## ISSAR report 2025




- ❖ Indian Space Situational Awareness Report (ISSAR) 2025 was released by the ISRO.
- ❖ The report gives annual data on satellites, space missions, and the space environment.
- ❖ In 2025, 315 successful launches placed 4,198 operational satellites globally.
- ❖ It highlights increasing space congestion with about 1.6 lakh close approach alerts in Low Earth Orbit.
- ❖ India has 144 spacecraft and active missions like Chandrayaan-2 Orbiter and Aditya-L1.
- ❖ It also mentions India's efforts, like Network for Space Objects Tracking and Analysis (NETRA) and Debris Free Space Mission, for space safety.



## National Fire Service Day 2026 – April 14




The 2026 theme is "Safe School, Safe Hospital & Fire Safety Aware Society Together for Fire Prevention."

## World Heritage Day 2026 – April 18




- It is also called the International Day for Monuments and Sites.
- It was established by UNESCO in 1983 after a proposal by International Council on Monuments and Sites (ICOMOS).
- The day promotes the protection of monuments, cultural sites, and traditions from damage and disasters.
- It highlights the protection of cultural heritage, natural heritage, monuments, and historical sites.
- The 2026 theme is "Emergency Response for Living Heritage in Contexts of Conflicts and Disasters."

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com